செய்தி வெளியீடு எண்: 651 நாள் : 26.12.2014

# பத்திரிக்கைச்செய்தி

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, 26.12.2014 இன்று சென்னை, தங்கசாலை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது விநியோகத் திட்ட கிடங்கில், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது, நவம்பர், டிசம்பர் மாதங்களில் உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையாளர் ஒதுக்கீடு செய்த அரிசி முழுவதும் இக்கிடங்கிலிருந்து நியாயவிலை அங்காடிகளுக்கு இயக்கம் செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார். பொது விநியோகத் திட்ட கிடங்குகளிலும், இந்திய உணவுக் கழக கிடங்குகளிலும் தமிழகத்தின் மூன்று மாத தேவையான 9 இலட்சம் மெ.டன் அரிசி கையிருப்பில் உள்ளது. இதில் 2 இலட்சம் மெ.டன் பச்சரிசி உள்ளது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

**மாநிலம் முழுவதும் விலையில்லா அரிசி பெற தகுதியுள்ள 1 கோடியே 87 இலட்சத்து 41 ஆயிரத்து 112 குடும்ப அட்டைதாரர்களுக்கும் 100% அரிசி பெறும் வகையில் மாதந்தோறும் அரிசி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.** பொது விநியோகத் திட்டம் மற்றும் அன்னயோஜனா திட்டங்களின் கீழ் குடும்ப அட்டைகளுக்கு உரிய அரிசி முழுவதும் வழங்கும் வகையில், மாதம் ஒன்றுக்கு சராசரியாக 3 இலட்சத்து 88 ஆயிரம் மெ.டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேவைக்கேற்றபடி அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்படுகிறது. மாத இறுதியில் அங்காடியில் கட்டாயமாக இறுதி இருப்பு வைக்க வேண்டுமென்று அறிவுரைகள் ஏதும் வழங்கப்படவில்லை. **அட்டைதாரர்களுக்குரிய அரிசியை**

**வழங்காமல், இறுதி இருப்பு பாரமரிக்க வேண்டியதில்லை என்று அங்காடி பணியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.**

பொது விநியோகத் திட்டத்தேவைக்கென மத்திய தொகுப்பிலிருந்து மாதந்தோறும் **2** இலட்சத்து **96** ஆயிரம் மெ.டன் அரிசியை கிலோ ரூ.**3** முதல் ரூ.**8.30** வரையிலும், நிகரத் தேவைக்கு வெளிச்சந்தை அரிசி திட்டத்தின் கீழ் கிலோ ரூ.**19.50** என்ற விலையிலும், இந்திய உணவுக் கழகத்திடமிருந்து அரிசி பெறப்படுகிறது. தமிழ்நாட்டில் கொள்முதல் செய்யப்படும் நெல்லிருந்து பெறப்படும் அரிசியும் பொது விநியோகத் திட்டத் தேவைக்கு ஈடு செய்யப்படுகிறது. தமிழ்நாட்டின் சத்துணவு, அன்னபூர்ணா மற்றும் மாணவர் விடுதிகள் ஆகியவற்றின் தேவைக்கென இந்திய உணவுக் கழகத்திடமிருந்து வருடத்திற்கு **2** இலட்சத்து **5** ஆயிரம் மெ.டன் அரிசி பிரத்யேகமாகப் பெறப்படுகிறது. எனவே, ஏனைய திட்டங்களுக்கு பொது விநியோகத் திட்ட அரிசி பயன்படுத்தப்படுவதில்லை.

அரிசி ஒதுக்கீடு மற்றும் விநியோகம் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளைக் களைவதற்கு, மாவட்டந்தோறும் **2**ம் சனிக்கிழமையன்று நடைபெறும் **“குறைதீர் முகாம்களில்” முறையிட்டு தீர்வு** காணலாம். சென்னை, உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையாளர் அலுவலக தொலைபேசி எண்.**28592828** மற்றும் www.consumer.tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொண்டு குறைகளைத் தெரிவிக்கலாம். அங்காடி ஊழியர்களும் இது சம்மந்தமான குறைகளை தங்கள் துறைத்தலைவரிடம் தெரிவிக்கலாம் என்பதையும் மீண்டும் நினைவூட்டுவதாக மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்தியாவிலேயே அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் விலையில்லா அரிசி உள்ளிட்ட திட்டங்களுக்காக உணவுத்துறைக்கு வருடந்தோறும் 5,300 கோடி ரூபாயை வழங்கி கொண்டிருப்பது தமிழக அரசு மட்டும்தான் எனவும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.**

இந்த ஆய்வின் போது அரசு உணவுத்துறை முதன்மை செயலாளர் திரு.முகம்மது நசீமுத்தின்,இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**